www.Padasalai.Net www.TrbTnpsc.com

ARIYALUR DISTRICT



பதிவு எண்: 10301

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2025

வகுப்பு : 10 **தமிழ்** மதிப்பெண்கள் : 100

நேரம் : 3.00 மணி

பகுதி- I

I. அனைத்து வினாக்களுக்கும் பொருத்தமான விடையைக் குறியீட்டுடன் எழுதுக. 15X1=15

1. மேன்மை தரும் அறம் என்பது.

அ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது ஆ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது

இ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என அறம் செய்வது ஈ) புகழ்பெறுவதற்காக அறம் செய்வது.

2. ஒரு பொருளைக் கொடுத்து உதவும் பொருட்டு வினவுவது.

அ) கொடைவினா ஆ) கொளல் வினா இ) ஏவல் வினா ஈ) ஐய வினா

3. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ------ இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர், ------

அ) அமைச்சர், மன்னன் ஆ) மன்னன், இறைவன் இ) மன்னன், அமைச்சர் ஈ) இறைவன், மன்னன்

4. "விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால் தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணயம் வைத்து விருந்தளித்தான்" என்கிறது புறநானூறு இச்செய்தி உணர்த்தும் பொருள்.

அ) உற்றாரின் விருந்து ஆ) அல்லிலும் விருந்து இ) இன்மையிலும் விருந்து ஈ) நிலத்திற்கு ஏற்ற விருந்து

5. "சிலை மேல் எழுத்து போல" – உவமை உணர்த்தும் பொருள்.

அ) ஆராய்ந்து பாராமை ஆ) நிலைத்திருத்தல் இ) பாதுகாப்பு உணர்வு ஈ) வாடிப்போதல்

6. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடக் காரணம்

அ) வலிமையை நிலைநாட்டல் ஆ) கோட்டையை முற்றுகையிடல்

இ) நாட்டைக் கைப்பற்றல் ஈ) ஆநிரை கவர்தல்

7. <u>காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்</u> நிலத்திற்கு நல்ல உரங்கள் ஆகும். இத்தொடரில் அடிக்கோட்ட பகுதி உணர்த்துவது.

அ) இலையும் சருகும் ஆ) சருகும் சண்டும் இ) தாளும் ஓலையும் ஈ) தோகையும் சண்டும்

8. "பெய்த மழை" என்பது வினைத்தொகையாக மாறக் கிடைப்பது

அ) பெய்யாத மழை ஆ) பெய்யும் மழை இ) பெய்கின்ற மழை ஈ) பெய்மழை

9. மலர்கள் தரையில் நழுவும், எப்போது?

அ) காம்பு முறிந்தால் ஆ) இறுக்கி முடிச்சிட்டால்

இ) தளரப் பிணைத்தால் ஈ) அள்ளி முகர்ந்தால்

10. இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது

அ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல் ஆ) அறிவியல் முன்னேற்றம்

இ) வெளிநாட்டு முதலீடுகள் ஈ) அரசின் நலத்திட்டச் செயல்பாடுகள்

11. பொருத்துக.

அ) கொண்டல் – 1. மேற்கு

ஆ) கோடை – 2. வடக்கு

இ) வாடை – 3. தெற்கு

ஈ) தென்றல் – 4. கிழக்கு

அ) 1 2 3 4 ஆ) 3 1 4 2 இ) 4 3 2 1 ஈ) 3 4 1 2

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.

செந்தீச் சுடரிய ஊழியும்; பனியோடு
தண்பெயல் தலைஇய ஊழியும்; அவையிற்று
உள் முறை வெள்ளம் மூழ்கி ஆர்தருபு
மீண்டும் பீடு உயர்பு ஈண்டி, அவற்றிற்கும்




Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



31. படங்கள் வெளிப்படுத்தும் நிகழ்வுகளை குறித்து எழுதுக.



பிரிவு – 2

குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2X3=6

வினா எண் 34 – க்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

32. சொல்லேருழவனுக்குக் கவரி வீசிய வில்லேருழவன் யார்? அந்நிகழ்வை எழுதுக.

33. விரிச்சி கேட்டல் நிகழ்வை முல்லைப்பாட்டின் வழி விளக்குக.

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) "வாளால் அறுத்துச்" – எனத் தொடங்கும் குலசேகராழ்வார் பாடல். (அல்லது)

ஆ) "செம்பொ னடிச்சிறு" – எனத் தொடங்கும் முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்ப் பாடல்.

பிரிவு – 3

குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2X3=6

35. "அறிந்தது, அறியாதது, புரிந்து, புரியாதது, தெரிந்து, தெரியாதது, பிறந்தது, பிறவாதது," இவை அனைத்தையும் யாம் அறிவோம். அது பற்றி உமது அறிவுரை எமக்குத் தேவையில்லை. எல்லாம் எமக்குத் தெரியும். இக்கூற்றில் அடிக்கோடிட்ட வினைமுற்றுகளை தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.

36. வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு – இக்குறளின் பயின்று வரும் அணியை விளக்குக.

37. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

பகுதி – IV

(மதிப்பெண்கள்: 25)

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5X5=25

38. அ) கருணையன் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க. (அல்லது)

ஆ) இறைவன் புலவன் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

39. அ) உணவு விடுதி ஒன்றில் வழங்கப்பட்ட உணவு தரமாற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக. (அல்லது)

ஆ) பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்கு பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறிவினர் ஒருவருக்கு கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.





Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



41. கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர், அரசு மேல்நிலைப் பள்ளியில் பயின்ற கவிநிலவன் என்ற மாணவர் பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் 450 மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றுள்ளார். மேல்நிலை முதலாம் ஆண்டு அதே பள்ளியில் கணினி அறிவியல் பிரிவில் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னைக் கவிநிலவனாகக் கருதி கொடுக்கப்பட்டுள்ள மேல்நிலை வகுப்புச் சேர்க்கை விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

42.அ) நீங்கள் பல்வேறு தருணங்களில் பிறருக்கு உதவியதையும் அதனால் தாங்கள் எய்திய மனநிலையையும் பட்டியலிடுக.

(அல்லது)

ஆ) ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களை கவிதையில் கண்டு எழுதுக.

| | |
|---|---|
| யாழிசை | It's like new lute music |
| அறைக்குள் யாழிசை | wondering at the lute music |
| ஏதேனும் சென்று | Coming form the chamber |
| எட்டிப் பார்த்தான் | Entered I to look up to in still |
| பேத்தி, | My grand - daughter |
| நெட்டுருப் பண்ணினாள் | Learning by rote the verses - |
| நீதிநூல் திரட்டையே | of a didactic compilation. |
| – பாரதிதாசன் | - Translated by kavignar desini |

அ) Lute music - ஆ) Grand daughter இ) To look up - ஈ) Rote - உ) Didactic compilation -

பகுதி – V

(மதிப்பெண்கள் – 24)

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3X8=24

43.

அ) மலர்ந்தும் மலராத பாதி மலர் போல
வளரும் விழி வண்ணமே – வந்து
விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்த இளந் தென்றலே – வளர்
பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே

கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரை செய்க.

(அல்லது)

ஆ) ஜெயகாந்தன் நினைவு சிறப்பிதழை வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்கவும்.

44.அ) ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக.

சூழல் –வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல்.

(அல்லது)

ஆ) இராமானுசர் நாடகத்தினை சுருக்கி கதையாய் எழுதுக.

45.குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி, தலைப்பு ஒன்று தருக.

அ) முன்னுரை – உழவே தமிழர் பண்பாட்டின் மகுடம் – உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் – சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் – முடிவுரை.

(அல்லது)

ஆ) முன்னுரை – தமிழகம் தந்த தவப்புதல்வர் – நாட்டுப்பற்று – மொழிப்பற்று – பொது வாழ்வில் தூய்மை – எளிமை – மக்கள் பணியே மகத்தான பணி – முடிவுரை.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com